காரணம் 2 ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு இருக்கிற ஒரு நினைவுச் சின்னத்தை இப்போது புதுப்பிப்பதையோ மாற்று வதையோ யாரும் ஒப்புக்கொள்ள மாட்டார்கள். அதை அப்படியே பாதுகாக்க வேண்டும். அதற்கு பக்கத்தில் — ஏன் என்றால் சில அடிகள் தூரத்தில் — இப்போது விவாதம் நடந்துகொண்டு இருக்கிறது, அதற்குப் பக்கத்திலேயே கண்ணகிக்கு ஒரு கோயிலை எழுப்ப வேண்டும் என்பதுதான் மாண்புமிகு புரட்சித் தலைவர் அவர்களுடைய திட்டம்.

(முற்பகல் 10-20)

(ஆ) கோவை சட்டக் கல்லூரி மாணவர்களுக்குத் தேவையான இடவசதி, பாடநூல்கள் போன்றவை குறித்து.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: மாண்புமிகு திரு. பொன் முத்துராமலிங்கம் கொடுத்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த கவன ஈர்ப்புத் தீர்மானத்தை மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பாலன் மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருவார்.

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "கோவையில் உள்ள சட்டக் கல்லூரி மாணவர்களுக்கு பாடப் புத்தகங்கள் கிடைக்காமையாலும், போதிய தகுதி உள்ள ஆசிரியர்கள், வகுப்பறைகள் இல்லாமையாலும், வெளியூர் மாணவர்களுக்கு முறையான தங்கும் விடுதி வசதி இல்லாமையாலும் அம்மாணவர்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நிலை குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு கல்வி அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, பேரவைமுன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன்.

அறிக்கை.

கோவை சட்டக் கல்லூரி 1979-80 கல்வியாண்டு முதல் தனியார் கட்டடத்தில் இயங்கி வருகிறது. அங்கு மூன்றாண்டு சட்டப் படிப்பில் 240 மாணவர்களும், ஐந்தாண்டு சட்டப்படிப்பில் 240

மாணவர்களும், மாலை நேரச் சட்டப்படிப்பில் 180 மாணவர்களும் பயிலுகிறார்கள். ஒவ்வொரு சட்டப்படிப்பிலும் மூன்று வகுப்பறைகளே உள்ளன. மூன்றாண்டு வகுப்புகள் மூன்றும் காலை 9-30 மணி முதல் மதியம் 1.05 வரையிலும், ஐந்தாண்டு சட்டப்படிப்பு மூன்று வகுப்புகளும் மதியம் 1.30 முதல் மாலை 5.30 மணி வரையிலும், மாலைநேர மூன்றாண்டின் மூன்று வகுப்புகளும் மாலை 5.45 முதல் இரவு 9.05 வரையில் நடத்தப்படுகின்றன. ஒவ்வொரு படிப்பிலும் மூன்று பிரிவுகளேயுள்ளதாலும், மூன்று வகைப் படிப்புகளும் வெவ்வேறு நேரங்களில் நடத்தப்படுவதாலும், இட வசதியில் எவ்வித இடையூறும் இல்லை.

2. கோவை சட்டக் கல்லூரியில் முதல்வரைத் தவிர்த்து மூன்று பேராசிரியர் பணியிடங்களும், 5 இளநிலைப் பேராசிரியர் பணியிடங்களும், இரண்டு பகுதி நேர இளநிலைப் பேராசிரியர் பணியிடங்களும், ஐந்தாண்டு சட்டப் படிப்பிற்கான பகுதி நேர உதவிப் பேராசிரியர் பணியிடங்கள் 10-ம் உள்ளன. இவற்றில் பேராசிரியர் பணியிடங்கள் இரண்டு மட்டும் காலியாக உள்ளன. இப்பேராசிரியர் பணியிடங்களை நிரப்ப நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. காலியாக உள்ள பேராசிரியர் பணியிடங்களின் வேலையை முதல்வருக்கும் மீதமுள்ள பேராசிரியர் மற்றும் இளநிலைப் பேராசிரியர்களுக்கும் பகிர்ந்து அளிக்கப்பட்டு பாடங்கள் நடத்தப்படுகின்றன. ஐந்தாண்டு சட்டப் படிப்பிற்கு முழு நேர ஆசிரியர்கள் பணியிடங்கள் தோற்றுவிக்கப்படவில்லை. ஏனெனில் முழு நேர ஆசிரியர்களுக்கு ஒவ்வொரு பாடத்திலும் போதிய பணியில்லை. ஆயினும் வரும் ஆண்டு முழு நேர ஆசிரியர்கள் பணியிடங்கள் தோற்றுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

3. கல்லூரி நூல் நிலையத்திற்கு ஆண்டுதோறும் ரூ. 50,000 பெறுமான புத்தகங்கள் வாங்கப்படுகின்றன. ஐந்தாண்டு சட்டப் படிப்பு புதிதாகத் தோற்றுவிக்கப்பட்டதால், அதன் முதல் இரண்டு வகுப்புகளுக்குச் சட்டமல்லாப் பாடங்களுக்கு பாடத்திட்டங்கள், எற்கனவேயுள்ள பல புத்தகங்களிலுமிருந்து எடுக்கப்பட்டுள்ளதால் இன்னமும் தனியாக பாடப் புத்தகங்கள் வெளி வரவில்லை. அகில இந்திய வழக்கறிஞர் மன்றம் பாடப் புத்தகங்களை தயார் செய்து கொண்டிருக்கிறது. அவை கூடிய சீக்கிரம் வெளியிடப் படுமென வழக்கறிஞர் மன்றம் தகவல் தந்துள்ளது. ஆயினும்

1986 மே 3] [திரு. செ. அரங்கநாயகம்]

பாடத் திட்டத்திலுள்ள பாடங்களைக் கொண்ட புத்தகங்கள் கல்லூரி நூல் நிலையத்தில் ஒவ்வொன்றிலும் பல படிகள் வாங்கி வைக்கப்பட்டு மாணவர்களுக்கு விநியோகிக்கப்படுகின்றன. தவிரவும் ஒவ்வொரு வருடத்திலும் பாடக் குறிப்புகள் ஆசிரியர்களால் தயாரிக்கப்பட்டு படிபெருக்கி மூலம் படிகள் எடுத்து மாணவர்களுக்கு வழங்கப்படுகின்றன. இதனால் மாணவர்களுக்கு இடையூறுகள் ஏதுமில்லை.

4. கோவையைப் பொறுத்தமட்டில், தனியார் கட்டிடத்தில் விடுதியொன்று உள்ளது. அதில் 30 மாணவர்களே தங்கி வருவதால் உணவு ஏற்பாடு செய்யப்படவில்லை. விடுதிகளில் உணவுச் செலவு மாணவர்களால் பிரித்து பகிர்ந்து கொள்ளப்பட வேண்டியது. மிகவும் குறைந்த அளவு மாணவர்கள் உள்ளதால் விடுதியில் தர ஏற்பாடு செய்தால், அவர்களின் செலவு கூடுவதால், அவர்கள் கையிலிருந்து அதிகம் பணம் செலவு செய்ய நேரும், அதிகமான மாணவர்கள் விடுதியில் சேர முன்வரும்போது உணவு வழங்க ஏற்பாடு செய்யப்படும்.

5. இப்பொழுதுள்ள நிலையில் மாணவர்களுக்கு வகுப்பறைகள் குறைவு, போதிய ஆசிரியர்கள் இன்மை, புத்தகங்கள் இன்மை, விடுதி வசதியின்மை போன்ற எந்தப் பிரச்சினையும் இல்லை.

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த விவர அறிக்கையில் கல்லூரி நூல் நிலையத்திற்கு ஆண்டுதோறும் ரூ. 50,000 பெறுமான புத்தகங்கள் வாங்கப் படுகின்றன. ஐந்தாண்டு சட்டப் படிப்பு புதிதாக தோற்றுவிக்கப் பட்டதால், அதன் முதல் இரண்டு வகுப்புகளுக்குச் சட்டமல்லாப் பாடங்களுக்கு பாடத் திட்டங்கள் ஏற்கனவே உள்ள பல புத்தகங் களிலுமிருந்து எடுக்கப்பட்டுள்ளதால் இன்னமும் தனியாக பாடப் புத்தகங்கள் வெளி வரவில்லை. அகில இந்திய வழக்கறிஞர் மன்றம் பாடப் புத்தகங்களைத் தயார் செய்து கொண்டிருக்கிறது. அவை கூடிய சீக்கிரம் வெளியிடப்படுமென வழக்கறிஞர் மன்றம் தகவல் தந்துள்ளது. ஆயினும் பாடத் திட்டத்திலுள்ள பாடங் களைக் கொண்ட புத்தகங்கள் கல்லூரி நூல் நிலையத்தில் ஒவ் வொன்றிலும் பல படிகள் வாங்கி வைக்கப்பட்டு மாணவர்களுக்கு

விநியோகிக்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி ஆனால் எப்போது அந்தப் புத்தகம் தயார் செய்து கொடுக்கப் படும் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கூடிய சீக்கிரம் வெளியிடப்படு மென வழக்கறிஞர் மன்றம் நமக்கு தகவல் தந்து இருக்கிறது. வந்த உடன் கிடைப்பதற்கான ஏற்பாடுகளை அரசு செய்யும்.

5. வரவு-செலவுத் திட்டம் 1986-87—வாக்கெடுப்பு—(தொடர்ச்சி).

(அ) கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள்.

மாண்புமிகு திரு. ஆனூர் பு. கோ. ஜெகதீசன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ரூ. 11,78,52,000-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப் பெற வேண்டும்."

திரு. சு. பாலன்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்னை போன்ற பெருநகரங்களில் வசிக்கும் குடிசை வாழ் மக்கள் தங்கள் வருவாயைப் பெருக்கிக்கொள்ள சிறு கைத்தொழில்கள் உண்டாக்கித் தர வேண்டிய அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,78,52,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."

திரு. ஆர். ரெங்கசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, கோவில்பட்டியில் தீப்பெட்டி தொழிலுக்கு வேண்டிய மூலப்பொருள் தொழிற்சாலைகளை அரசு நிறுவுவது குறித்து விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மானியக் கோரிக்கை எண். 48—ஊரகத் தொழில்கள் என்ற தலைப்பின்கீழ் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 11,78,52,000-ல் ரூ. 100 குறைக்க வேண்டும்."